வைத்திய சந்திரிகை
Tinlu 1961

JL
LBM 211.N39
N61.237
168896

178/3.61

श्री धन्वन्तरये नमः।

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்ரிகை

வ - ஆனி, ஆடி

JULY 1961



குதி 23 நதி 7

Vol. 23 No. 7

ஆசிரியர் :
பண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்.
உப ஆசிரியர் & பிரசுரகர்த்தா:
S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி,
வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.

பொருளடக்கம்

| | |
|---|---|
| சென்னை இந்திய வைத்திய கலாசாலை | 5 |
| ...ஸயில் காலத்தின் முக்கியத்துவம் | 7 |
| ... | 17 |
| ...ம விக்ஞானம்—(தனி) | 21—24 |

Annual Subscription Rs. 5/-

JL
ஊ211, N39
N61·23·7
188896.

கா... 18, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

ஸ்தாபிதம் : 1902. ✲ போன் நெ. 44 (திரூர்)

பிராஞ்சுகள் :

கல்லாய் ரோடு, கோழிக்கோடு
(போன் நெ. 2155) ;
★
வடக்கம்தரா, பாலக்காடு
(போன் நெ. 104) ;
விற்பனை டிப்போ
G. B. ரோட்டில்
★
திரூர் (போன் நெ. 31)

ஈரோடு (முனிசிபல்
பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில்) ;
(போன் நெ. 172)
★
மகாத்மாகாந்தி ரோடு,
எர்ணுகுளம் (போன் நெ. 674)
★
ஸ்டாட்ச்யூ ரோடு,
திருவனந்தபுரம்
(போன் நெ. 3924)

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக் கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்சைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மானேஜிங் டிரஸ்டி.



# A WORD OF ADVICE

If You are ever in need of Pure Musk, Saffron, Shilajit, Hing, Pearls & Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with Un-Known and Un-Reliable Firms

*Have your requirments from :—*

**KALIA BROTHERS (Regd.)**

JULLUNDUR CITY—N. INDIA

✲

## ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜித், பெருங் காயம், முத்து, ஹிமாலய மூலிகைகள் முதலியன உங்களுக்குத் தேவையானல்—

முன் பின்னறியாததும் நம்பிக்கையில்லாததுமான ஸ்தாபனங்களோடு ஒருபோதும் பரீக்ஷை செய்ய வேண்டா.

✲

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

**கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)**

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams: AMRUTHAM P. B. 82 Phone: 2208

# The Arya Vaidya Pharmacy
## (Coimbatore) Limited.
## H. O.: Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments.

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752),
Cannanore (Phone 92),
Palghat (Phone 195),
Kozhikode (Phone 984),
Ernakulam (Phone 494)
Ponani (Phone 41),
Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani.

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent.



# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) — Phone No. 660

ரஸசாலா:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு.
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

*விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.*

S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, *மானேஜிங் டைரெக்டர்*

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி

கீழ ராஜவீதி, — புதுக்கோட்டை.

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

**ஸ்ரீ. P. விச்வநாத சர்மா**

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
சிறந்த சிகித்சை அளிக்கப்படுகிறது

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யநாதன், உதவி வைத்யர்.

P. விச்வநாத சர்மா, பிரதான வைத்யர்.




# வைத்ய சந்திரிகை.


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 23 | பிலவ – ஆனி, ஆடி. | பகுதி 7 |
| Vol. 23 | JULY 1961 | No. 7 |


आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शाश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

## சென்னை இந்திய வைத்திய கலாசாலை.

சென்ற மாதத்திய வைத்ய சந்திரிகை இதழில் சென்னையில் இக்கல்வி ஆண்டுத் தொடக்கத்திலேயே இந்திய மருத்துவக் கல்லூரியைத் தனித்து சென்னை சர்க்கார் ஆரம்பிக்க முனைந்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தோம். சென்னை சர்க்கார் இது பற்றிய முடிவிற்கு இன்னமும் வந்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீ மேஹ்தா அவர்களின் தலைமையிலுள்ள கமிட்டி தனது யாதாஸ்தில் ஆயுர்வேதம் சித்தம் யூனானி இம்மூன்றுக்கும் தனித்தனிப் பாடதிட்டம் நிறுவி அதில் முறையே 30-50-25 மாணவர்களுக்கு ஸ்தானம் கொடுக்கப்படவேண்டு மென்றும் குறிப்பிட்டுள்ளது. அது தவிர நவீன வைத்யமும் இந்திய வைத்யமும் பயின்ற நிபுணர் ஒருவரை இலாகாத் தலைவராக அமைத்து இவ்விலாகாவை தனித்து இயங்கச் செய்யவேண்டும் என்பதும் சென்னை ஸர்வ கலாசாலையின் B. I. M. பட்டத்திற்கானப் பாட முறை அமைக்கப் பட வேண்டு மென்பதும் இப்பரீக்ஷையில் தேறியவர்களுக்குத்

தனியே இரண்டாண்டுகள் அலோபதிப் படிப்பு சொல்லித் தந்து ஒரு டிப்ளோமா அளிக்கவேண்டு மென்பதும் கமிட்டியின் மற்ற சிபார்சுகள்,

சென்னை சர்க்கார் ஸர்வகலாசாலையினரிடம் இன்னம் கலந்தாலோசித்து முடிவுக்கு வரவில்லை எனத் தெரிகிறது. கலாசாலை தாமதத்திற்கு மற்றோர் காரணம் இதற்கென தனி இடம் இன்னம் கிடைக்காததே. சென்னையிலுள்ள வைத்யர்கள் கீழ்ப்பாக்கத்துக் கல்லூரியிலேயே இதற்கு இடம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றனர். நாட்டுவைத்ய முறைகளிலும் பற்றும் நவீன வைத்ய முறைகளின் ஞானமும் அரசாங்கத்தின் நம்பிக்கையும் பெற்ற இலாகாத் தலைவர், கல்லூரித் தலைவர் போன்றவர்களின் நியமனம் அவ்வளவு எளிதாக ஆவதாகத் தெரியவில்லை. வைத்ய சமூகத்தின் நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பெற்று அரசாங்கத்திடமிருந்து நாட்டுவைத்யத்திற்கான எல்லா உதவிகளையும் பெறும் துணிவும் திறனும் படைத்தவர்களாக இவர்கள் அமைவது இன்று மிகவும் அவசியமானதாகும்.

தமிழ்நாட்டில் இத்தகுதி பெற்ற வைத்யர்களுக்குக் குறைவில்லை என்றாலும் அவர்கள் தமது சொந்த சௌகர்யங்களைப் புறக்கணித்துக் கொண்டு இந்தப் பணியில் ஸேவை மனப்பான்மையுடன் பொறுப்பேற்க முன் வரத் தயங்கலாம். மிகப் பொறுப்புள்ள காரியமானதால் சற்று தாமதித்தாலும் நல்ல திறனுள்ளவர்களையே கல்லூரி தலைவராகவும் இலாகா தலைவராகவும் நியமிப்பது மிகவும் அவசியமாகும்,

**வைத்ய சந்திரிகை வெளியீடுகள்**
**வெளிவருகின்றன!**

1. யோகரத்நாகரம்— தமிழ் மொழிபெயர்ப்பு.
   [ஜ்வரம்—அதிஸாரம்—கிரஹணீ, அர்சஸ், அஜீர்ண ரோகங்கள்] முதல் பாகம். ரூ. 2 00
2. சாரீரச்சொற்கள் அகராதி. ரூ. 1 00

ஆகஸ்டு முதல்வாரத்தில் வெளியாகும். தபால் செலவு தனி.

# சிகித்ஸையில் காலத்தின் முக்கியத்துவம்.

[வைத்ய. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி.]

காலத்தையும் தேசத்தையும் ஒட்டி அவைகளின் பலத்தைக் கருத்திற் கொண்டு செயல் புரிவது எதிர்பார்க்கும் பலனைத் தர வல்லதெனப் பெரியோர் கூறுவர். வைத்யன் சிகித்ஸை புரியும் போதும் பரீக்ஷை செய்யும் போதும் காலத்தையும் தேசத்தையும் முக்கியமாகக் கருத்திற் கொள்ளவேண்டியிருக்கின்றன.

காலத்தையும் தேசத்தையும் பற்றிக் குறிப்பிடும் போது ஆயுர்வேதம் அதற்கு தனிப் பொருளை விளக்குகின்றது. காலம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு விடையளிக்கும் சரகர் நிமிஷம் முதல் வருடம்வரை வகுக்கப்படும் காலவரையும் ரோகி ரோகத்தை அனுபவிக்கும் வெவ்வேறு நிலைகளும் காலம் என்பதன் பொருள்* என்கிறார். தேசம் என்பது என்ன வென்பதை விளக்கும்போது நோயாளி வாழும் பூமியும் நோயாளியும் தேசம் என்கிறார்.† இவ்விதம் நோயாளியையும் நோய் நிலையையும் தேசம் காலம் என்ற இரு சொற்களுக்கும் பொருளாகச் சேர்த்திருப்பது ஆயுர்வேதத்தின் தனிப் பெருமையாகும். தேசம் என்பது இருப்பிடம் எனப் பொருள்படும். ஆயுர்வேத வைத்யனுக்கு அவன் செய்யும் சிகித்ஸைக்கு இருப்பிடமான ஆதாரமான நோயாளியும் தேசமாகிறான்.‡ அவ்விதமே நோயாளியின் நிலைகளான பால்யம், யௌவனம், விருத்தாப்பியம் போன்றவையும் ஸாமம், நிராமம், ஆமம், பக்வம், தருணம், ஜீர்ணம் முதலிய நோய் நிலைகளும் காலத்தின் பொருளாகின்றன. இந்த நோயிலே காலத்திற்கேற்ப திரிதோஷங்களின் இயற்கையான வளர்ச்சி-குறைவு முதலியவைகளை ஆசார்யர்கள் விளக்குகின்றனர். காலத்தின் பரீக்ஷையை இங்கு கவனிப்போம்.

ஆண்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு தோஷம் வளர்வதும், பிரகோபமடைவதும், தானே சமன மடைவதும்

* कालः पुनः संवत्सरश्चातुरावस्था च । (சரக-விமானம். 8.)
† देशस्तु भूमिरातुरश्च । (சரக-விமானம். 8.)
‡ आतुरस्तु खलु कार्यदेशः । ,,

ஆண்டின் பகுதியின் பருவத்தின் (ருதுவின்) ஸ்வபாவத்திற்கேற்ப நடைபெறுகின்றது. பூமியில் முளைக்கும் செடிகொடிகளின் தன்மை மாறுபாட்டிற்கேற்பப் பிராணிகளின் பலத்திலும் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. இவை பருவ வேற்றுமையால் ஏற்படுபவை. இப்பருவங்களில் வாத பித்த கபங்களின் நிலையையும் ஒட்டி அந்த அந்த தோஷங்களுக்கு ஸம்சோதனமோ ஸம்சமனமோ செய்யப்படுகின்றது. ஆண்டில் ஏற்படும் பருவ மாறுபாட்டை இரவு பகல் என்ற காலவரைக்குள்ளேயே சிற்சில வேளைகளில் வாதபித்தங்களில் ஒவ்வொன்று வளர்ந்து பிரகோபமடைந்து சமனமடைவதைக் காணலாம். நாளிலோ ஆண்டிலோ ஒரு தோஷத்தின் பிரகோபஸமயத்தில் அதனால் ஏற்படும் வியாதி தலை எடுக்கின்றது அல்லது அவ்வியாதி முன்னரே இருந்திருந்தால் கடுமை நிலையை அடைகின்றது. இந்த ஆண்டு அல்லது நாளாகிற காலவரை மாறிமாறி வந்துகொண்டேயிருக்கக் கூடுமானதால் நித்யகம் (नित्यग:) என்பர்.

இதைத் தவிர ரோகியினுடைய பால்யம், யௌவனம் போன்ற பருவ மாறுபாடுகளோ, ஆமம், பக்குவம், தருணம், ஜீர்ணம் என்ற நோய் நிலைகளோ இந்த மருந்து கொடுக்கத் தகுந்த வேளை இதுதான் என்பது போன்ற ஔஷதகாலமோ இவைகளை ஆவஸ்திகம் (आवस्थिक) என்பர். அவஸ்தை—ரோகி அல்லது ரோகத்தின் நிலையைப் பொறுத்தது இந்தக் கால வரை.

இவ்விரண்டையும் கவனிப்பது தான் கால பரீக்ஷை.

**ஆண்டின் அயனப் பிரிவினை :—** ஆண்டைப் பொதுவாக உத்தராயணம் தக்ஷிணாயனம் என்று ஸூர்யன் வடக்கு-தெற்கு திசைகளில் ஸஞ்சரிப்பதை ஒட்டிப் பிரிக்கிறார்கள். உத்தராயணம் சிசிரம் வஸந்தம் கிரீஷ்மம் என மூன்று ருதுக்களாகப் பிரிகின்றது. இக்காலத்தில் பூமியின் குளிர்ச்சி குறைந்து பிராணிகளின் உடல் வலிவு குறைகின்றபடியால் இதை ஆதான காலம் என்பர்.* தக்ஷிணாயனம் வர்ஷா, சரத், ஹேமந்தம் என மூன்று ருதுக்களாகப் பிரிகின்றது. இக்காலத்தில் உத்தராயணத்தில் மிகுந்து வளர்ந்த வெப்பமும் வரட்சியும் குறைந்து குளிர்ச்சி மிகுந்து பிராணிகள் நல்ல வலுவடைகின்றனர். அதனால் இதை விஸர்க்க காலம் என்பர்.

* இதற்கான விரிவுரையை ஆயுர்வேதஸாரத்தில் காண்க.



ஸூர்யன் தெற்குதிக்கில் ஸஞ்சரிப்பதால் ஏற்படும் தனிப்பட்ட இயற்கை மாறுதல், மேகம் காற்று மழை முதலியவைகளால் ஸூர்யனின் தாபம் குறைந்து சந்திரனின் சக்தி மிகுந்து காணுதல், நிலவினால் ஸ்தாவர ஜங்கமப் பொருள்கள் மேலும் புஷ்டி பெறுதல், வர்ஷ ருதுவில் புளிப்பும் சரத்ருதுவில் உப்பும் ஹேமந்தத்தில் இனிப்பும் பலம் பெற்று வரட்சியையும் தாபத்தையும் குறைத்தல் இவை காரணமாக தக்ஷிணாயனத்தில் கிரமமாக பிராணிகளின் பலம் வளர்கிறது. உத்தராயணத்தில் முற்றிலும் இந்நிலை மாறுபடுகின்றது. ஸூர்யனின் தாப மிகுதியும் வாயுவின் வரட்சியும் காரணமாக ஸ்தாவர ஜங்கமப் பொருள்களிலுள்ள நெய்ப்பு வற்றி, வரட்சி மிகச் செய்யும் கசப்பு துவர்ப்பு காரம் எனும் சுவைகள் முறையே பலம் பெறுவதால் உடல் பலம் மிகக் குறைகின்றது.

சிகித்ஸை செய்யும் போது இந்த அயன மாறுபாட்டை உற்றுக் கவனித்தால், உத்தராயணத்தில் ஆதானகாலத்தில் ஏற்பட்ட நோய், பலக்ஷயம் தாதுக்ஷயம் காரணமாக வாயு பிரகோபமடைந்துள்ளதை கவனிக்கலாம். அல்லது பலக்ஷயம் தாதுக்ஷயம் காரணமாக முன்னரே ஏற்பட்டிருந்த வாத வியாதி உத்தராயண காலத்தில் வலுப் பெறுவதைப் பார்க்கலாம். வியாதியின் பலாபலத்தை அறிய அயன நிலை இவ்வகையில் உதவி அளிக்கின்றது.

அந்த அந்த ருதுவில் அந்த அந்த சுவை பலம் பெறுவதற்குக் காரணம் அக்காலங்களில் அந்த அந்த சுவைக்கு ஆதாரமான (ஐம்) பூதங்களின் சக்தி வலிவடைவது தான். கிரீஷ்ம ருதுவில் அக்னி வாயு பூதங்களின் சக்தி வலுப்பதால் இவ்விரண்டு பூதங்களின் மிகுதியால் ஏற்படும் உரைப்பு அதிகமாகின்றது. வஸந்தருதுவில் பிருதிவியும் வாயுவும் வலுப்பெறுவதால் அந்நிலையில் துவர்ப்பு வலுப் பெறுகின்றது.

அயனங்களின் இந்த சக்தி வேறுபாட்டிற்கு ஸூரியனின் ஸஞ்சாரம் முக்கியமான காரணமாகின்றது. ஸ்தாவர ஜங்கமப் பொருள்களின் ஸ்ருஷ்டியில் ஸூர்யன் மகத்துவம் பிராசீன—நவீன விக்ஞானங்கள் இரண்டிலும் விசேஷமாக உணரப்பட்டுள்ளன. ஸூரியனிடமிருந்து ஸௌஷும்னை எனும் கிரணம் சந்திரனிடம் செல்கின்றது. இது ஆரோக்கியத்தை அளிப்பது. நவீன விக்ஞானத்திலும் வெளிச்சத்திற்கும் விளக்கத்திற்கும் உதவியான ஏழு நிறக் கிரணங்கள், உஷ்ணத்திற்குக் காரண

மான கருஞ் சிவப்புக் கிரணம் (infra red ray) பலம் புஷ்டியளித்து ரஸாயன மாறுதலையளிக்கும். நீல கிரணத்திற்கப்பாற்பட்ட கிரணம் (ultra violet) ஆக ஒன்பது கிரணங்கள் ஸூர்யனிடத்தில் உள்ளன. இவைகளை சந்திரன் தான் ஏற்றுக்கொண்டு அல்ட்ராவயலட் கிரணத்தை மாத்திரம் பூமிக்குத் திருப்பிவிட்டு மற்ற கிரணங்களைத் தன்னிடத்தில் வைத்துக் கொள்ளுகிறான். மழை முதலியவைகளால் ஸூர்யனின் கிரணங்கள் நேரிடையாக பூமியை அடையமுடியாத தக்ஷிணாயன காலத்தில் சந்திரன் திருப்பியனுப்பும் அல்ட்ராவயலட் கிரணங்களால் பலம் புஷ்டியளித்து ஸ்தாவர ஜங்கம ஸ்ருஷ்டியை வலுப்படுத்துகிறான். ஸூர்யனின் கிரணங்கள் நேரிடையே பூமியில் படும்போது உஷ்ணத்திற்குக் காரணமான இன்ப்ராரெட் கிரணங்கள் தன் செயலைப் புரியும் காலம் உத்தராயணமாகும். இந்த ஸூர்ய சந்திரர்களின் செயலுக்கு ஸஹாயமாக நின்று உதவி புரிவது வாயு.* வெளியுலகில் காணப்படும் இந்த வாயு ஸூர்யன் சந்திரன் என்ற மூன்றின் சக்தியே சரீரத்தில் வாயு பித்தம் கபம் இவைகளின் சக்தியாகத் திகழ்கிறது.

**ஆண்டின் ருதுப் பிரிவினை :—** ருது என்பது பருவமாகும். பனிகாலம், வெயிற்காலம், மழைகாலம் எனப் பொதுவாக மூன்றாகப் பிரித்து ஒவ்வொன்றையும் இரண்டாக்கி ஆறு பருவங்களாகக் கணக்கிடுவர். ஆயுர்வேதத்தில் ருதுப் பிரிவினை இரண்டு விதமாகச் செய்யப்பட்டுள்ளது. இரண்டிற்கும் லக்ஷ்யம் வேறு.

சிசிரம் வஸந்தம் கிரீஷ்மம் வர்ஷா சரத் ஹேமந்தம் என்று தொடர்ந்து ஆறு ருதுக்கள் உலக வழக்கில் உள்ளவையே. இவ்வாண்டு முறை மாசியில் ஆரம்பித்து இரண்டிரண்டு மாதங்களுக்கு ஒரு ருதுவாகக் கணக்கிடப் படுகின்றது. அவைகளின் முக்கியத்துவத்தையும் பிராணிகளின் பலாபலத்தையும் ருதுசர்யை போன்ற ஸ்வஸ்த விருத்தத்தையும் மனதிற் கொண்டு அமைத்த ருதுப்பிரிவினை இது.

மற்றொரு ஆண்டுமுறை ஆடி மாதத்தில் ஆரம்பித்து இரண்டு மாதங்களுக்கு ஒரு ருதுவாக பிராவிருட், வர்ஷா, சரத்

* शीतांशुः क्लेदयत्युर्वी विवस्वान् शोषयत्यपि ।
तावुभावपि संश्रित्य वायुः पालयति प्रजाः ॥
(ஸுச்ருத ஸூத்ர. 6வது அத்.)

ஹேமந்தம், வஸந்தம் கிரீஷ்மம் என ஒரு மாதம் முன்கூட்டி வகுக்கப் படுகின்றது. இது ஆயுர்வேதத்திற்கென—சிகித்ஸையின் ஸௌகர்யத்திற்கென தனியே வகுத்துக்கொள்ளப்பட்டது.* இந்த முறை சோதன சிகித்ஸைக்குக் காலம் வகுப்பதற்காக ஏற்பட்டது. இம்முறையில் முன் கூறிய சிசிரருது இடம் பெறவில்லை. பிராவிருட் என்ற புதிய ருது இடம்பெறுகின்றது. மழைகாலத்தின் ஆரம்பத்தில் கடுமையான மழை பெய்யும் மாதங்கள் பிராவிருட் எனப்படுகின்றன. இம்முறையின் முக்ய உபயோகம் சிகித்ஸையில்தான்.

பருவமாறுபாட்டினால் ஒருதோஷம் தன்னளவை விட அதிகமாகி பிரகோபமடைந்து நோயை உண்டாக்குகின்றது. அவ்விதமே பருவநிலைகாரணமாகத் தானே சமனமடைகின்றது. பிரகோபம் மத்யமமான நிலையிலிருந்தால் பட்டினி கிடத்தல் முதலியவைகளைக் கையாளுவதால் சமாளிக்க முடியும். பிரகோபம் கடுமையாக இருந்தால் சோதன சிகித்ஸை செய்வது அவசியமாகின்றது.† இந்த சோதன சிகித்ஸைக்கான காலம் எது? சயப் பிரகோபங்கள் எந்த நிலையை அடையும்போது சோதன சிகித்ஸை செய்யலாம்? என்ற கேள்விக்கு பதில் கூறும் வகையில் இந்த இரண்டாவது பருவப் பிரிவினையைக் கூறியுள்ளார்கள்.

பிரகோபமடைந்த தோஷம் வியாதியை உண்டுபண்ணும் நிலையை அடையக் கூடுமானால், அதன் முன்னரே அந்த தோஷத்தை வெளியேற்றுவதே சோதனத்தின் லக்ஷ்யம். அவ்வகையில் வஸந்தருது (பங்குனி—சித்திரை) வில் கபத்தை வமனத்தாலும், சரத்ருது (கார்த்திகை-மார்கழி) வில் பித்தத்தை

* एवमेते संशोधनमधिकृत्य षट् विभज्यन्ते ऋतवः ।
(சரகவிமானம். 8 அத்.)

शोधनं प्रति इति शोधने कर्तव्येऽयं यथोक्तः प्रावृडाद्यृतुविभागो भवति। स्वस्थवृत्तौ रसोत्पत्तौ च तस्याशितीयोक्तः। तेन रसबलोत्पाद-चिन्तायां स्वस्थवृत्तानुष्ठानेषु च शिशिरादिक्रमो भवति ।
(சக்ரதத்தரின் உரை.)

† बहुदोषाणामेव संशोधनं, मध्यदोषेषु पाचनादि ।
अल्पदोषेषु पुनर्लंघनपिपासानिग्रहादि यथर्तुविधिसमयाचारश्च ।
(ஸுச்ருத ஸூத்ர. 6வது அத்யாயம் டல்லணர் உரை )

விரேசனத்தாலும், வர்ஷருது (ஆடி-ஆவணி) வில் வாயுவை பஸ்தியாலும் வெளியேற்ற வேண்டும்.* சோதன சிகித்ஸை பிரகோப நிலையை அடைவதற்கு முன்னரே சயநிலையிலேயே சிகித்ஸை செய்வது தான் உசிதம். அதனால் எந்த ருதுவில் எந்த தோஷம் சயம் (தன்னளவில் தன்னிடத்திலேயே அதிகமாவது) அடைகின்றதோ அப்போதே தகுந்த ஆஹார விஹாரங்களால் சிகித்ஸை செய்வது நல்லது.

பருவகாலங்களில் இயற்கையாகக் குடலில் வாதபித்தகபங்கள் வளர்ந்தும் பிரகோபமடைந்தும் தானே சமனமடைந்தும் வருகின்றன. அத்துடன் மனிதனும் தோஷநிலை யறியாது வாதாதிகளை தன் உணவு முதலியவைகளால் அதிகப்படுத்தினால் சீக்கிரமே பிரகோபமடைந்து கடும் வியாதிகளை உண்டாக்குகின்றது. ஆக இரண்டு முக்கிய விஷயங்கள் இங்கு மனதிற்கொள்ளவேண்டும்.

1. மனிதன் ஆஹாரவிஹாரங்களில் எத்தனை கட்டுப்பாட்டுடனிருந்தாலும் பருவங்கள் காரணமாக ஒவ்வொரு தோஷம் சிறிதளவாவது பிரகோபமடைந்தே தீரும். பிரகோபமடைந்த தோஷம் சிறிதளவிலாவது சரீர மன உபாதைகளைச் செய்தே தீரும்.

2. ஒரு தோஷம் ஸஞ்சயமடையும் காலத்திலேயே அந்த தோஷம் பிரகோபமடையும் வகையில் உணவு முதலியவைகளை அமைத்துக் கொள்பவனுக்கு ஸஞ்சயமாகும் ருதுவிலேயே பிரகோபமும் ஏற்படும். இதைத் தவிர்ப்பதும் பிரகோப நிலை வியாதியை உண்டாகும் நிலைமையை அடையாமல் பாதுகாப்பதும் தான் ருதுசர்யையின் முக்கிய லக்ஷ்யம்.

ஹேமந்த ருதுவிற்கு முன் ருதுவான சரத்தில் விரேசனமும் ஹேமந்தத்திற்கடுத்த வஸந்தத்தில் வமனமும் செய்யச் சொல்லியிருக்கிறது. ஹேமந்தத்தில் இவ்விருவகை சோதன சிகித்ஸையும் நல்லதல்ல. ஹேமந்தத்தில் குளிர் மிகுதி. அதனால் ஸ்தம்பித்து நிற்கும் தோஷம் ஸ்திரமாகி வெளியாகாது. சோதனத்திற்காகக் கொடுக்கப்படும் மருந்து உஷ்ண வீர்யமா

---

* हरेद्वसन्ते श्लेष्माणं पित्तं शरदि निर्हरेत् ।
वर्षासु शमयेत् वायुं प्राग्विकारसमुच्छ्रयात् ।

(ஸுச்ருத ஸூத்ரம் 6 அத்.)



யிருக்குமானதால் உள் சேர்ந்து குளிரால் தாக்கப்பட்டு வீர்யம் குன்றி செயலாற்றமுடியாது. அப்போது மருந்திற்கு அயோகம் அல்லது ஹீநயோகம் ஏற்படுகின்றன.

இம்மாதிரியே க்ரீஷ்மருதுவில் வமனமோ பஸ்தியோ செய்வது உசிதமல்ல. இதில் தாபமிகுதி காரணமாக உடல் வருத்தமடைகின்றது. ஸூரியதாபத்தால் இளகித் தளர்ந்த தோஷங்கள் வெளியேறத் தயாராகவே இருக்கின்றன. சோதனத்திற்கான உஷ்ணமான மருந்து உஷ்ணமாகி யிருக்கும் உடலில் சேரும்போது கடும் சூடாக மாறி ஔஷதத்தின் அதியோகம் ஏற்படுகின்றது.

இம்மாதிரியே வர்ஷருதுவான புரட்டாசி ஐப்பசி மாதங்களிலும் சோதன சிகித்ஸைக் கேற்றதல்ல. மழையால் நனைந்து ஈரமான சூழ்நிலையில் மருந்து முதலியவைகளும் பச்சிலைகளும் ஈரத்தால் ஓரளவு சக்தி குன்றியிருக்கும்போது வமனம் முதலியவை கொடுக்க சிரமம் அதிகமாக ஏற்படுகின்றது. அதிகமான வியாபத்துகள் ஏற்படுமானதால் கவனம் அதிகமாக தேவைப்படுகின்றது. அதனால் மித்யாயோகம் ஏற்படாமலிருக்க இந்த ருதுவையும் தள்ளவேண்டியிருக்கிறது.

அதனால் ஹேமந்தத்திலும் க்ரீஷ்மருதுவிலும் வர்ஷருதுவிலும் சோதன சிகித்ஸை செய்வதில்லை. ஆனால் இந்த ருதுக்களிலே சோதன சிகித்ஸை செய்ய நேரிடின் பருவகால நிலைக்கேற்ற மாற்று செய்துகொண்டே சிகித்ஸை ஆரம்பிக்க வேண்டும். குளிர்காலத்தில் குளிருக்கு மாற்றும், உஷ்ணகாலத்தில் உஷ்ணத்திற்கு மாற்றும் செய்து சூழ்நிலையால் ஔஷத சக்தி குன்றாமலும் அதிகமாகாமலும் விபரீதமாகாமலும் செய்ய வேண்டாம்.

**தோஷங்களும் ரோகங்களும் தானே சமனமடையும் பருவம்:—** ஒரு ருதுவில் அதிகமாகும் தோஷம் அடுத்துவரும் ருதுவில் பிரகோப நிலையை அடைகின்றது. அளவில் அதிகமாகும் போதேயோ அல்லது பிரகோப நிலையை அடைந்த உடனேயோ தோஷத்திற்குச் சமனமோ சோதனமோ செய்ய வியாதி வருவ

---

* शीते शीतप्रतीकारमुष्णे चोष्णनिवारणम् ।
कृत्वा कुर्यात् क्रियां प्राप्तां क्रियाकालं न हापयेत् ।

(ஸுச்ருத ஸூத்ர. 35வது அத்.)

இல்லை; பிரகோப நிலையை அடைந்த பின்னரும் சிலசமயம் தகுந்த சூழ்நிலை பெறுததால் நோயை ஏற்படுத்துவதில்லை. அதைத் தொடர்ந்து வரும் ருதுவில் தானே சமனமடைகின்றது. நோய்நிலையை அடைந்திருந்தால் கூட யாப்யமான வியாதியில் கூட நோய் இந்த காலத்தில் தணிந்தே இருக்கும்.

கிரீஷ்மத்தில் வளரும் வாயு வர்ஷருதுவில் பிரகோபமடைந்து சரத்தில் தானே சமனமாகின்றது. வர்ஷருதுவில் வளரும் பித்தம் சரத்தில் மிகுந்து ஹேமந்தத்தில் சமன மடைகின்றது. சிசிரருதுவில் வளரும் கபமும் வஸந்தத்தில் மிகுந்து கிரீஷ்மத்தில் தானே குறையும்.

**ருதுவைப் போல தினமும் :—** ஒரு ஆண்டை ஆறாகப் பிரித்தது போல இரவு பகல் கொண்ட ஒரு நாளையும் ஆறாகப் பிரித்து அதிலும் தோஷங்களின் சயப் பிரகோப சமனங்கள் ஏற்படும் காலத்தை விளக்கியுள்ளனர்.

காலை நடுப்பகல் பிற்பகல் முன்னிரவு நள்ளிரவு பின்னிரவு என ஒரு நாளை ஆறு பகுதிகளாக்கலாம். இவை முறையே வஸந்தம், கிரீஷ்மம், பிராவிருட், வர்ஷா, சரத், ஹேமந்தம் என்ற ஆறு ருதுக்களின் லக்ஷணங்களைப் பெற்றுள்ளன. காலை முதலிய நேரத்தின் இயற்கைக் குணங்களையும் உணவு பாக மடைவதையும் பொறுத்து லக்ஷணங்கள் ஏற்படுகின்றன.

குளிர்காலம்— காலை, முன்னிரவு

வெயிற்காலம்— நடுப்பகல், நள்ளிரவு

மழைகாலம்— பிற்பகல், பின்னிரவு

இவ்வாறு இந்த மூன்றுவித கால நிலைகளும் ஒத்து வருகின்றன. இவைகளைக் கவனிப்போம்.

**காலை :—** இதில் வஸந்தருதுவின் குறிகள் காணும். கபம் பிரகோபமடையும் வேளை. கபநோய்கள் அதிகமாகும் வேளை. அல்லது கபநோய் ஏற்பட்டிருந்தால் அது கடுமையடையும் வேளை.

**நடுப்பகல் :—** கிரீஷ்மத்தின் குறிகள் இதில் காணும். வெயில் தாபத்தால் பித்தம் மிகுந்து காணும். தாபத்தால் ஏற்பட்ட வரட்சி காரணமாக வாயு சேர ஆரம்பிக்கும். கபம் தானே குறையும்.

**பிற்பகல் :—** பிராவிருட்டின் குணங்கள் காணும். வாயு பிரகோபமடையும். பிற்பகலில் அதிகமாக ஆரம்பித்த வாயு மாலை நேரத்தின் குளிர் காற்றால் பிரகோப மடைகின்றது.

**முன்னிரவு :—** வர்ஷருதுவின் குறிகள் இதில் காணும். பித்தம் சேர ஆரம்பிப்பதும் கபம் பிரகோப மடைவதும் இதில் இயற்கை.

**நள்ளிரவு :—** சரத்ருதுவின் குறிகள் இதில் காணும். பித்தம் இந்நிலையில் பிரகோபமடையும். வாயு சமனமடையும்.*

**பின்னிரவு :—** ஹேமந்தத்தின் லக்ஷணம் இதில் காணும். கபம் சேரும். வாயு பிரகோபமடையும்.

ஆக பிற்பகல் பின்னிரவு பிராவிருட்ருது இம்மூன்றிலும் வாத ரோகங்களும், முற்பகல் முன்னிரவு வர்ஷருது இம்மூன்றிலும் கபநோய்களும் நடுப்பகல் நள்ளிரவு கிரீஷ்மருதுக்களில் பித்த நோய்களும் ஏற்படுகின்றன.

இவை நித்யகமன காலத்தின் நிலைகளின் பரீக்ஷை.

**போஜன காலத்தை யொட்டி தோஷப்பிரகோபம் :—** உணவு உட்கொள்ளும் நேரத்திற்கும் அதன் ஜீர்ண வேளைக்கும் வாத பித்த கபங்களுக்கு முள்ள தொடர்பு கவனிக்கத் தக்கது. அன்னம் ஆமாசயத்தை யடைந்ததும் கோஷ்டத்தில் ஹிருதயத்திற்கு மேற்பட்ட பாகத்தில் உள் இனிப்பு சுவையுள்ள சுரப்புகளால் உண்ட உணவு அனைத்தும் இனிப்பாகி தன் குணத்திற்கொத்த கபத்தை வளர்க்கிறது; வளர்ந்த கபத்தைப் பிர

---

* நள்ளிரவில் நல்ல குளிர்ந்த வேளையில் பித்தம் பிரகோபமடையக் காரணம் யாது? டல்லணர் கூறும் பதில் இங்கு கவனிக்கத் தக்கது.

शारदमर्धरात्र इति भूगोलाधःस्थितसूर्यत्वादर्धरात्रे शारदं लिंगमातपाभावेऽपि इति गोलकगणितविदो ज्योतिर्विदो मन्यन्ते । भिषजस्तु कालस्वभावादाहारवशाच्चेति ।

பூகோள ஜ்யோதிஷ சாஸ்திரப்படி நடுப்பகலில் ஸூர்யன் பூமியின் மேலே நடுவே காணப் படுவதைப் போல நள்ளிரவிலும் பூகோளத்தின் அடியில் நடுவே காணப்படுகிறான். இதனால் இந்த வேளையில் ஒரு கொதிப்பும் புழுக்கமும் ஏற்படுவதே பித்த விருத்திக்குக் காரணமாகலாம். மற்றும் ஆயுர்வேதிகளுக்கு உகந்த மற்றொரு காரணம் உணவு ஜீர்ணமாவதன் நடு நிலையை அடைவதன் காரணமாக பித்தம் உடலில் தானே அதிகமாகி நிற்கும் என்பதே.

18896

கோபமடையச் செய்கிறது. அந்நிலையில் அயர்வு முதலிய கப குணங்கள் உடலில் காணப்படுகின்றது. பிறகு ஆமாசயத்திலிருந்தும் தொப்புள் வரை செல்லும் குடல் வழியில் பித்தமும், உண்ட உணவு பித்தத்தால் பக்குவமடைந்து ஸாரம் பிரிக்கப்பட்ட பின் நெய்ப்பும் கசிவும் குறைந்து வரண்டு திரண்ட மலாம்சம் பெருங்குடல் வழியே செல்லும் போது வாயுவும் உண்டாகின்றது. பித்த வாதங்கள் இந்தப் பகுதிகளில் உணவு செல்லும்போது பிரகோபமடைகின்றன. அதனால் உணவு ஜீர்ண ஆரம்பத்தில் கபநோய்களும் நடுவில் பித்த நோய்களும் கடைசியில் வாத நோய்களும் உண்டாகின்றன. அல்லது உணவு ஜீர்ணமாக ஆரம்பிக்கும் நிலையில் ஆரம்பிக்கும் நோய் கப நோயாக இருக்கும். ஜீரண முறையின் நடுவில் இருக்கும் போது ஏற்படுவது பித்த நோயாகவும் ஜீரணமுடிவில் ஏற்படுவது வாதநோயாகவும் இருக்கும் எனக் கொள்ளலாம். முன்னரே ஆரம்பித்துத் தொடரும் நோயானால் இந்த வேளைகளில் அந்த அந்த தோஷம் பிரகோபமடையுமானதால், அந்தந்த பிரகோபமடைந்த தோஷங்களா லாரம்பிக்கப் பட்ட நோய் பலமடையும். தோஷ விபரீத சிகித்ஸை செய்யும்போது இந்தக் கால ஆராய்ச்சி மிகவும் பயன்படும். ஜ்வரம், வயிற்றுவலி முதலியவைகளில் இதை ஸுலபமாக அனுபவத்திற்குக் கொணர முடியும்.

ஆனால் இந்த ஒரு அம்சத்தைக் கொண்டு மாத்திரம் தோஷ நிர்ணயம் செய்வது சரியாகாது. உதாரணமாக வாயுவால் உதரசூலம் உள்ளவனுக்கு சாப்பிட்டவுடன் கப-பித்த ஸ்தானங்கள் நிரம்பி நிற்கும் போது பெருங்குடலில் தங்கியுள்ள பிரகோபமடைந்த வாயுவிற்கு ஸஞ்சாரத்திற்கு இடமில்லாமல் வலி ஏற்படுத்தலாம். இது போன்ற ஆவரண நிலைகளில் தோஷ நிர்ணயம் உபசய-அநுபசயங்களால் செய்யப்படவேண்டி வரும்.

உணவின் ஜீரணவேளைகளில் ஏற்படும் இந்த இயற்கையான தோஷ வளர்ச்சி எல்லாருக்கும் நோயை உண்டாக்குவதில்லை. நோயை உண்டாக்குவதற்கான சூழ்நிலை அங்கு ஏற்படவில்லை எனக் கொள்ளலாம். இந்த இயற்கை தோஷ வளர்ச்சியைக் கூட அவ்வப்போது சமனம் செய்துகொள்ளும் நோக்குடன் உண்டவுடன் வளர்ந்த கபத்தை அடக்க தூமபானம், தாம்பூலம், மத்யமகாலத்தில் பித்தத்தைக் குறைக்க ஜலம் குடித்தல் முதலிய உபசாரங்களை ஏற்றுக்கொள்வது ஆரோக்ய ஸுகமறிந்தவர்கள் செய்துகொள்ளும் சிஷ்டாசாரமாகும்.



**வயதை யொட்டிய தோஷ வளர்ச்சி :—** பகலையோ இரவையோ மூன்றாகப் பிரித்துக் கணக்கிட்டது போல வயதையும் பால்யம் யௌவனம் விருத்தாப்யம் என்று மூன்றாகப் பிரித்து பால்யத்தில் கபமும், யௌவனமாகிற நடுவயதில் பித்தமும் கடைவயதான விருத்தாப்பியத்தில் வாயுவும் இயற்கையாக அதிகமாகும் என்பதும் வியாதி நிர்ணயத்தில் உதவக்கூடியது. பால்யத்தில் வரும் கபநோய், நடுவயதில் வரும் பித்த நோய், விருத்தாப்பியத்தில் வரும் வாத நோய் இவை கடுமையாக இருக்கும் என்பதில் ஸந்தேகமில்லை.

ஆக இதுவரை கூறப்பட்ட ருது, நாள், வயது, உணவின் ஜீர்ணம் இவைகளுக்கான காலவரையைப் பற்றிக் கூறியுள்ளதை நித்யக கால பரீக்ஷை என்பர். இனி ஆவஸ்திக காலநிலையைப்பற்றி சிந்திப்போம். (தொடரும்.)

## செய்திகள்.

## வைஸூரி சிகித்ஸை பற்றிய பிராந்தீய முறைகள்.

டெல்லி இந்திய மருத்துவ முறை ஆலோசகர் காரியாலயத்திலிருந்து வைஸூரித் தடுப்பு விஷயமாக ஒரு சுற்றறிக்கை நாட்டிலுள்ள பல்வேறு முக்ய வைத்யர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. மத்ய சர்க்காரின் சுகாதார இலாகா நாட்டிலுள்ள தொத்துநோய்களைத் தடுப்பது சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. ஆயுர்வேத முறை இவ்விஷயத்தை எவ்விதம் அணுகுகிறது என்பதை அறிய முற்படுவது மத்ய ஆயுர்வேத ஆலோசகரின் நன் முயற்சியால் ஏற்பட்டுள்ளது. வைஸூரி ஸம்பந்தமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் கையாளப்பட்டு வரும் நோய் பரவாமல் தடுப்பது, நோய் வந்தபின் செய்யப்படும் பணிவிடை, உணவு, மருந்து, சுத்தி முதலியவைகளில் பழக்கங்கள், தொன்றுதொட்டுப் பெரியோர்கள் கடைபிடித்து வந்த அனுபவ முறைகளின் உபயோகம் முதலியவை பற்றிய குறிப்பைத் தயாரித்து அனுப்புமாறு நமது தலைவர் ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரீ ஆயுர்வேதாசார்ய அவர்களுக்கு வந்த சுற்றறிக்கைக்கு ஸ்ரீ சாஸ்திரிகளின் கோரிக்கைப்படி மஹாமண்டல மூலமாகவே பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஸ்ரீ சாஸ்திரிகள், ஸ்ரீ A. ராகவராவ், ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, ஸ்ரீ T. S. ஈச்வரய்யர் இவர்களடங்கிய குழு தமிழ் நாட்டின் அனுபவங்களைத் தாமறிந்ததையும் மற்றுமுள்ள

வைத்ய நண்பர்கள் அறிந்ததையும் தொகுத்து ஆயுர்வேத ஆலோசகர் காரியாலயத்திற்கு அனுப்பியுள்ளது. இதுபற்றிய விபரம் அடுத்த இதழில் வெளியாகும்.

## திருச்சி ஆயுர்வேத ஸபை.

திருச்சி ஆயுர்வேத ஸபையின் மாதாந்தக் கூட்டம் 18—6—61 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-15 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பிஷக்வர ஸ்ரீ A. ராகவராவ் A. L. I. M., அவர்கள் தலைமை வகித்தார்கள். "அக்னி மாந்த்யம்" (மந்தாக்னி.) என்னும் விஷயம் பற்றி சர்ச்சை நடைபெற்றது. சர்ச்சையில் அங்கத்தினர்கள் அனைவரும் கலந்துகொண்டு, அவரவர்களுடைய அனுபவபூர்வமாக உள்ள விஷயங்களை நன்கு எடுத்துக் கூறினர்கள். தலைவருடைய முடிவுரையுடனும், கடைசியில் கார்யதர்சியின் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் மாலை 6 மணிக்கு முடிவுற்றது.

## தமிழ்நாட்டு நாட்டு மருத்துவர்கள் மத்ய சங்கம், சேலம் மகாநாடு.

சென்ற 24-5-1961 அன்று சேலத்தில் தமிழ்நாட்டு நாட்டுமருத்துவர்கள் மத்யசங்க மகாநாடு நடைபெற்றது. மகாநாட்டிற்கு ஸ்ரீமதி ஹேமலதா ஸுப்ரமண்யம் M. L. A. அவர்கள் தலைமை வகித்தார்கள் ஸ்ரீ A. ஸுப்ரமண்யம் M. L. C. ஸ்ரீ A. ரத்னவேலு கவுண்டர் M. L. A. முதலானோர் கலந்து கொண்டார்கள். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. நாட்டு மருத்துவக் கல்லூரி உடனடியாக திறக்கப்படவேண்டும்.

2. நாட்டு வைத்யத்திற்கென்றே தனிப்பட தலைமைப் பொறுப்பாளர் (Director of Indigenous medicino) நிறுவ வேண்டும்.

3 தலைமைப் பொறுப்பாளர் தான் அக்கல்வியையும் கல்லூரிதிட்டத்தையும் பரிபாலிக்க வேண்டும்.

4. நாட்டுவைத்யர்களுக்கென்றே பிரத்யேக ஆலோசனைக்குழு நிறுவவேண்டும்.

5. இணைப்புக் கல்லூரியின் தற்போதைய கட்டடத்தையே நாட்டு மருத்துவக் கல்லூரிக்குக் கொடுத்து விடவேண்டும்.

மகாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு ஸ்ரீ M. ராஜாபிள்ளை விருந்தளித்தார். ஸ்ரீ R. K. பழனியப்பா நன்றி கூறினர்.



5. ***மணிபந்தமர்மம்***:—மணிக்கட்டு என்னும் ஸந்தி மர்மம். வைகல்யகர மர்மப் பிரிவைச் சேர்ந்தது. இரண்டு அங்குல இடத்தில் அமையப் பெற்றது. கையும் முன்கையும் சேருமிடத்திலுள்ள பூட்டு இது. இங்கு அடிபட்டால் வலி, கைகளில் தளர்ச்சி. கூழை முதலிய உபத்திரவங்கள் ஏற்பட்டு அங்கவீனம் ஏற்படும்.[1]

***அமைப்பு***:— மணிக்கட்டு எனப்படும் இப்பூட்டு மர்மத்தில் முன்னங்கையின் இரு நீட்டெலும்புகளும் உள்ளங்கையிலுள்ள குத்தெலும்புகளும் சேர்கின்றன. இச்சேர்க்கையில் பங்கு பெறுபவைகளான அந்த:பிரகோஷ்டாஸ்தி, பஹி:பிரகோஷ்டாஸ்தி எனப்படும் இரு முன்கை நீட்டெலும்புகளின் மணிக்கட்டு பிரதேசத்திலுள்ள முனைகளைப் பிணைக்கும் தசைநார்கள்.[2]

மணிக்கட்டின் உட்புறத்தைப் (அந்தப் பிரகோஷ்டாஸ்தியின் முனையுடன்)பிணைக்கும் தசைநார்[3]

மணிக்கட்டு முழுவதையும் கட்டும் தசைநார்.[4]

மணிக்கட்டின் வெளிப்புறத்தை பஹி:பிரகோஷ்டாஸ்தியுடன் பிணைக்கும் தசைநார்[5]

இவை இங்கு அடிபடுவதால் கேடடைகின்றன. பூட்டு நழுவுதல், பூட்டிலுள்ள எலும்பு முறிவு, பூட்டுகளில் ஒன்றின் மேல் மற்றொன்று ஏறிக்கொள்ளுதல் முதலிய கேடுகள் விளைந்து சரியான சிகித்ஸை ஏற்படாவிடில் கைகூழையாகவே ஆகிவிடலாம்.

6. ***இந்திரபஸ்திமர்மம்***:— முன்னங்கையின் நடுவில் உள்ள மாம்ஸ மர்மமாகும். காலாந்தரப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்

---

1. हस्तप्रकोष्ठयोः संधाने मणिबन्धो नाम ।
   तत्र रुजः स्तब्धहस्तता कुणिर्वा । (ஸு. சா. 6.)
2. Radio ulnar ligaments.
3. Ulnar collatral ligaments.
4. Radio carpal ligaments.
5. Radial collatral ligaments.

தது. இரண்டு அங்குல அளவுள்ளது.[1] இங்கு அடிபட அதிக அளவில் ரத்தக்கசிவு ஏற்பட்டு மரணம் உண்டாகும்.[2]

***அமைப்பு*** **:—** முன்னங்கையின் நடுவிலே அங்குள்ள தசைகள் வெகுவாக விரிந்து சுருங்கி திரண்டு நிற்குமிடம். உள் அந்த: பிரகோஷ்ட—பஹி:பிரகோஷ்ட தமனிகள் நரம்புகள் சேருமிடமானதால் ரக்தக்கசிவும் கைகளில் இயக்கக் குறைவும் ஏற்படலாம். இங்கு கூடும் உறுப்புகள் பின்வருமாறு—

பஹி:பிரகோஷ்ட தமனி எனும் ரக்தக் குழாயின் வில் போன்று வளைவும் அதிலிருந்து கிளம்பும் கிளைகளும்.[3]

அந்த: பிரகோஷ்டதமனியின் வில்வளைவும் அதன் கிளைகளும்.[4]

மத்ய பிரகோஷ்ட நரம்புகளின் கிளைகள்.[5]

கையைப் பிரட்டும் தசை.[6]

விரல்களை மடக்கும் தசை.[7]

மணிக்கட்டை உட்புறம் வளைக்கும் தசை.[8]

ரக்தக் குழாய்களிலும் நரம்புகளிலும் அடிபடுவதால் ரக்தக்கசிவு தடுக்கப்படாவிடில் மரணம் ஏற்படுத்தக் கூடியது.

**7. கூர்ப்பரமர்மம் :—** இது முழங்கைப் பூட்டிலுள்ளது. ஸந்தி மர்மப் பிரிவைச் சேர்ந்தது. வைகல்யகரமாகும். 3 அங்

1. போஜரும் கயதாஸரும் இரண்டு அங்குலம் என்றும் மற்ற ஆசார்யர்கள் அரை அங்குலம் என்றும் கூறுவர்.
2. हस्तं प्रति प्रकोष्ठमध्ये इन्द्रबस्तिर्नाम ।
   तत्र शोणितक्षयेण मरणम् । (ஸு. சா. 6.)
3. Radial artery with its volar branches.
4. Volar interosseonus branches of the ulnar artery.
5. Branches of mediam nerve.
6. Pronator teres.
7. Flexor digitorum sublimis.
8. Flexor carpiradialis.



குலப் பருமனுள்ளது. இதில் குத்துப்பட கை கூழையாகின்றது.[1]

***அமைப்பு*** **:—** இதன் அமைப்பில் பங்கு கொள்பவை பின்வருமாறு:—

பூட்டுகளைச் சுற்றியிருக்கும் ஜவ்வுப் பை.[2]

முன்னங்கையின் வெளிப்புற எலும்பின் தசைக் கயிறு.[3]

முன்னங்கையின் உள்புற எலும்பின் தசைக்கயிறு.[4]

முழங்கைப் பூட்டைச் சுற்றி வளையங்களாக உள்ள தசை நார்கள்.[5]

இந்தப் பூட்டில் ஏற்படும் தாக்குதல் முன்னங்கையை மடித்து நீட்டும் செயலுக்குக் கேடு விளைவிக்கின்றது. முழங்கைப் பூட்டைப் பூட்டி இயக்கும் தசைநார்கள் வலுவிழப்பதால் கை கூழையாகி அங்கவீனம் ஏற்படுகின்றது.

**8. ஆணீ மர்மம் :—** முழங்கைக்கு மூன்று அங்குலம் தள்ளி மேற்புறத்தில் இருபுறமும் உள்ள ஸ்நாயு மர்மம். வைகல்யகரமர்மப் பிரிவைச் சேர்ந்தது. மூன்று அங்குலப் பரப்பு உள்ளது. இங்கு அடிபட வீங்கி கை ஸ்தம்பித்து வேலை செய்யமுடியாது போகும்.[6]

***அமைப்பு*** **:—** இதன் அமைப்பில் புஜத்தின் இருதலைத் தசையின்[7] இருதலைகளும் முக்கியப் பங்கு பெறுகின்றன. மற்றும் பாஹ்வீ தமனீ[8]

1. प्रकोष्ठप्रगण्डयोः सन्धाने कूर्परं नाम तत्र कुणिः । (ஸு. ச. 6.)
2. Articular capsule.
3. Radial collatral ligament.
4. Ulnar ligament.
5. Annular ligament.
6. कूर्परादूर्ध्वमुभयतस्त्र्यंगुलं आणी नाम ।
   तत्र शोफाभिवृद्धिः स्तब्धबाहुता च । (ஸு. ச. 6.)
7. Biceps.
8. Arteria profunda Brachei.

புஜத்தின் நடுவே வரும் நரம்பு[1]

அந்த:பிரகோஷ்ட நரம்பு[2]

பஹி:பிரகோஷ்ட நரம்பு[3]

புஜத்தின் இருதலைத் தசை[4]

புஜத்தின் மூன்று தலைத் தசை[6]

தோள் வளையின் காக்கை மூக்கு போன்ற முண்டிலிருந்து புஜத்தின் நடுவில் வந்து சேரும் தசை.[6]

கைகளை இயக்கும் முக்கியத்தசைகளும் தசைகளை இயக்கும் நரம்புகளும் அமைந்திருக்கும் இவ்விடத்தில் அடிபட்டால் தசைகள் கெட்டுக் கடுமையான வீக்கமும், நரம்புகள் கெட்டு இயக்கம் தடைபடுவதும் ஏற்படுகின்றது.

9. **பாஹ்வீ மர்மம் :—** ஆணீ மர்மத்தின் மேற்புறத்தில் புஜத்தின் நடுவிலுள்ள சிராமர்மம். வைகல்யகர மர்மப்பிரிவைச் சேர்ந்தது. ½ அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட ரக்தக்குழாய் தாக்கப்பட்டு ரக்தசேதம் உண்டாகி கை காய்ந்து விடும்.[7]

*அமைப்பு :—* இதன் அமைப்பில் புஜத்தின் பிரதான சுத்த அசுத்த ரக்தக் குழாய்கள்[8] முக்கியமாக பங்கு பெறுகின்றன. மற்றும் புஜத்தின் நடுவே வரும் நரம்பு.[9]

முன்னங்கையின் அந்த:பிரகோஷ்ட நரம்பு.[10]

---

1. Median nerve.
2. Ulnar nerve.
3. Radial nerve.
4. Biceps Brachei muscle.
5. Triceps Brachei muscle.
6. Coraco Brachialis.
7. वाहुमध्ये वाह्वी नाम मर्म ।
   तत्र शोणितक्षयात् वाहुशोषः । । (ஸு. சா. 6.)
8. Brachial artery and vein.
9. Median nerve.
10. Ulnar nerve.


# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை : 1 அவுன்ஸ் ரூ. 5-8-0  1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனு பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS.**

**MUSK MERCHANTS.**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.

தி இண்டியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ்
பார்மஸி அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185

பலகைவாருவதி ரோடு, அடையாறு, மதராஸ் 20.
தபால் பெட்டி நெ. 907. போன் நெ. 71628.

தலைவர்:— டாக்டர் V. நாராயணசாமி, H. P. I. M.
உபதலைவர்:— டாக்டர் M. A. பத்மனபராவ், L. I. M.

அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகை :— ரூ. 1,00,000
(பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் 20 000 பங்குகள் கொண்டது)

| | | | |
|---|---|---|---|
| வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை | ... | ரூ. | 92,880-00 |
| க்ஷேம நிதி | ... | ரூ. | 2,96,996-40 |
| கட்டிடநிதி | ... | ரூ. | 1,54,144-70 |
| மற்ற நிதிகள் | ... | ரூ. | 2,91,858-04 |

அங்கத்தினராகும் வாய்ப்பு:—

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள மாகாணங்களில் பதிவு பெற்ற வைத்தியர்களும், மற்றவிதமான தகுதி பெற்ற வைத்தியர்களும்.
2. பஞ்சாயத்து, முனிஸிபாலிடி. ஜில்லா போர்டு ஆகியவையும், மற்றும் இந்திய வைத்திய இலவச ஆஸ்பத்திரி நடத்தும் குழுக்களும், கழகங்களும்.
3. மொத்தமாகவும், சில்லரையாகவும் வியாபாரம் செய்யும் கூட்டுறவு சங்கங்களும்.

நாங்கள் சிறந்த முறையில் சாஸ்திரீய முறைப்படி. தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை, எல்லா இந்திய மருந்துகளைக் கையாளும் வைத்தியர்களுக்கும் சப்ளை செய்கிறோம். நீங்கள் இந்த சங்கத்தில் அங்கத்தினராகிவிட்டீர்களா? இன்றேல், இன்றே விண்ணப்ப பாரத்திற்கும் மற்ற தகவல்களுக்கும் எழுதுங்கள்.

உங்கள் சௌகர்யத்திற்கு எங்கள் வெளியீடுகள்:–

1. வைத்ய யோகரத்னவளி ஆங்கில பிரதி ரூ. 6—00
   " தெலுங்கு பிரதி ரூ. 6—50
2. சித்தா பார்மகோபியா ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00
3. யூனானி பார்மகோபியா ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது விலை ரூ. 3—00

(தபால் செலவும் விற்பனைவரியும் தனி)

உங்களுடைய தேவைக்கு எங்களுக்கு எழுதவும்—அல்லது
கீழ்க்கண்ட எங்கள் பிராந்தீய அலுவலகங்களில் பெறவும்.

(1) 20/320. பெட்டி பொட்டலவாரி தெரு. கவர்னர் பேட்டை, விஜயவாடா–2. (ஆந்திர ராஜ்யம்.) (போன் நெ. 285)
(2), 66, காட்டன்பேட்டை, பெங்களூர்–2. (மைசூர் ராஜ்யம்.)
(3) கள்ளிக்கோட்டை கூட்டுறவு அர்பன் பாங்கு கட்டிடம், கல்லாய் ரோடு, கள்ளிக்கோட்டை–2. (கேரள ராஜ்யம்.)
(4) நகர விற்பனை நிலையம் 4/186, மவுண்ட் ரோடு, சென்னை–2 போன் நெ. 86520.
(5) விற்பனை நிலையம், வைச்ய ஹாஸ்டல் கட்டடம்; கச்சிகூடா ஸ்டேஷன் ரோடு, ஹைதராபாத்.

Y. கொண்டல் ராவ், காரியதரிசி.

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரிக்ஷை அனுபவங்களினுல் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

"சக்தி ஸஞ்ஜீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலேக் கட்டிகளை எந்நிலையிலும்

போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

சக்தி விலாஸ வைத்தியசாலா,

கரூர். (S. Ry.)

Printed at the Srivilasam Press, Srirangam and Published by
S. V. Radhakrishna Sastri for Tamilnad Ayurveda Maha Mandalam,
Chinnakadai Street, Teppakulam, Tiruchy - 2.
Editor: Pandit. S. M. Sundararajacharya, Srirangam, Tiruchi - 6.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.